IN THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (R.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.D.Gnanadeepam Grade III Bench clerk on 20.09.2024. in accordance with the provisions of Act XX111.

RLT.OP.No.11/2022

| | | | |
|---|---|---|---|
| பெயர் | | தாலுகா | |
| தகப்பனார்/கணவர் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

எ.ம.சா.1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

23.05.2018ம் தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**23.05.2018ம் தேதியிட்ட வாடகை ஒப்பந்தத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

மனுதாரர் எனக்கு எழுதிகொடுத்த உறுதிமொழி பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**09.03.2019ம் தேதியிட்ட உறுதிமொழி பத்திரத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது மனைவி பெயரில் உள்ள சமையல் எரிவாயு ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**சமையல் எரிவாயு ரசீதுகள் அசல் (10எண்ணம்) மற்றும் நீதிமன்ற சான்றிட்ட நகல் (10 எண்ணிக்கை) எ.ம.சா.ஆ. 3 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்குரிய மின் கட்டண ரசீதுகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**மின் கட்டண ரசீதுகள் அசல் (13எண்ணம்) மற்றும் நீதிமன்ற சான்றிட்ட நகல்கள் (18 எண்ணம்) எ.ம.சா.ஆ. 4 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

மனுதாரர் எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**06.05.2022 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு எ.ம.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது வழக்கறிஞர் மனுதாரருக்கும் அவரது வழக்கறிஞருக்கும் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**30.07.2022ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் நகல் எ.ம.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது வழக்கறிஞர் அனுப்பிய அறிவிப்புகளை மேற்படி நபர்கள் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (2எண்ணம்) எ.ம.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் புறநோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான புறநோயாளிகள் சீட்டின் நீதிமன்ற சான்றிட்ட நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**22.07.2022ம் தேதியிட்ட புறநோயாளிகள் சீட்டின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

நான் திருநகல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுக்களின் நகலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**14.04.2022ம் தேதியிட்ட புகார் மனுவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ. 9 ஆகவும், 21.04.2022 ம் தேதியிட்ட புகார் மனுவின் நீதிமன்ற சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.10 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன.**)

நான் மனுதாரர் மற்றும் அவரது உறவினர் நடராஜன் ஆகியோர்கள் மீது கொடுத்த புகார் மனு மற்றும் புகார் மனுக்களை திருநகர் காவல் ஆய்வாளர் மற்றும் மதுரை மாநகர ஆணையர் ஆகியோருடன் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டைகளை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**புகார் மனு மற்றும் அஞ்சல் ஒப்புகை அட்டைகள் (2 எண்ணம்) எ.ம.சா.ஆ. 11 வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது.**)

எனது வழக்கறிஞர் மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சல் உறையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**04.05.2022ம் தேதியிட்ட திருப்பப்பட்ட அஞ்சல் உறை எ.ம.சா.ஆ. 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி எ.ம..சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)